

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 22-09-2025


# வேலுநாச்சியாருக்குச் சிறப்பு

**வீ**ரமங்கை வேலுநாச்சியார் சிலையைத் தலைநகர் சென்னையில் அமைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். வேலூரில் இருக்கும் காவலர் பயிற்சி மையத்துக்கு வேலுநாச்சியார் பெயரைச் சூட்டி இருக்கிறார் முதலமைச்சர்.

**இந்திய விடுதலைப் போராட்டத்தின் மாபெரும் அடையாளங்களில் ஒருவர் வேலுநாச்சியார். ஆண்கள் கோலோச்சிய போர்க்களத்தில் தனித்துத் தெரியும் தனிப்பெரும் பெண் ஆளுமை அவர்.இந்திய விடுதலைக்காகப் போராடிய முதல் பெண் அரசி இவரே.**

முத்து வடுகநாதரின் நினைவிடத்தில் தனது தாலியைக் காணிக்கையாக்கி களத்தில் குதித்தார் அவரது மனைவி வீரமங்கை வேலுநாச்சியார். தனது கணவரைக் கொலை செய்தவர்களைத் தோற்கடித்தார்.

வேலுநாச்சியாருக்குப் பின் அவரது மகள் வெள்ளச்சி நாச்சியார் ஆட்சி செலுத்தி மக்களைக் காத்தார்.

இப்படிக் குடும்பம் குடும்பமாக மண்ணைக் காத்தது சிவகங்கை மண்!

இராமநாதபுரம் மன்னர் செல்லமுத்து சேதுபதிக்கும், சிவகங்கை அருகே உள்ள சக்கந்தி என்னும் ஊரைச் சேர்ந்த முத்தாத்தாள் நாச்சியாருக்கும் 1730-ஆம் ஆண்டு வேலுநாச்சியார் பிறந்தார். போர்க்களம்சென்றுவாளெடுத்துபோர்புரியும்பயிற்சியைஇளமையிலேயே பெற்றார். சிலம்பம், வாள்வீச்சு, ஈட்டி எறிதல், அம்பு விடுதல், குதிரை ஏற்றம், யானை ஏற்றம் ஆகிய திறமைகளை இளமையிலேயே பெற்றார். பல்வேறு மொழிகளில் புலமை பெற்றார். ஆறு மொழிகள் தெரியும். ஆங்கிலேயரிடம் ஆங்கிலம், பிரெஞ்சு மொழியில் பேசினார்.

சிவகங்கைச் சீமையின் இரண்டாவது மன்னர் (1750-1772) முத்துவடுகநாத தேவருக்கும் வேலுநாச்சியாருக்கும் 1746-ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. அவரது பட்டத்து ராணியானார்.

முத்துவடுகநாதர், ஆற்காடு நவாப் முகமது அலிக்குக் கப்பம் கட்ட மறுத்தார். அதன் காரணமாகக் கம்பெனிப் படையும், ஆற்காடு நவாபின் படையும்இணைந்துகாளையார்கோவிலில்தங்கியிருந்தமுத்துவடுகநாதர் மேல் போர் தொடுத்தன. இதில் வீர மரணம் அடைந்தார் முத்துவடுகநாதர்.

கணவர் இறந்துவிட்டார் என்று அழுது புலம்பாமல், வீட்டுக்குள் முடங்காமல் படை திரட்டினார் வேலுநாச்சியார். விருப்பாட்சி சென்றார். விருப்பாட்சி மன்னர் கோபால் அவருக்கு உதவிகள் செய்தார். வேலுநாச்சியாரைக் கொல்ல கொலையாளிகளை அனுப்பினார்கள். ஒற்றவர்கள் வந்தார்கள். அத்தனை சதிகளையும் முறியடித்தார் வேலுநாச்சியார். அங்கிருந்தபடியே மைசூர் மன்னர் ஹைதர் அலியின் நட்பை பெற்றார். ஐயாயிரம் குதிரை வீரர்களையும், ஐயாயிரம் போர் வீரர்களையும் ஹைதர்அலியிடம் கேட்டார் வேலுநாச்சியார். அவரும் வழங்கினார்.

வேலுநாச்சியார் தலைமையில், மருது சகோதரர்கள் வழிகாட்டுதலில், இந்தப் படைகள் சிவகங்கை நோக்கிச் சென்றன. மதுரை கோச்சடையில் இரண்டு தரப்புக்கும் நடந்த சண்டையில் வேலுநாச்சியார் வெற்றி பெற்றார். நவாப் படைகளையும், கம்பெனி படைகளையும் விரட்டினார் வேலுநாச்சியார். எட்டு ஆண்டுகள் போராடினார். இறுதியில் வென்றார்.

சிவகங்கை கோட்டையை 1780-ஆம் ஆண்டு கைப்பற்றினார் வேலுநாச்சியார். பெரியமருதுவைப் படைத்தளபதியாகவும், சின்ன மருதுவைப் பிரதானியாகவும் (முதலமைச்சர்) நியமனம் செய்து ஆட்சி நடத்தினார். அவரது ஆட்சியில் வேளாண்மை செழித்தது. ஆறுகளை அகலப்படுத்தினார். ராணி வேலு நாச்சியாரின் 10 ஆண்டு ஆட்சி, 1789 டிசம்பரில் முடிவுற்றது. அவர், தமது அறுபத்தாறாம் வயதில் 25.12.1796 இல் சிவகங்கையில் காலமானார்.

**பெண்ணாய் இருந்து படை நடத்தி, தனது படையில் பெண்களையும் அதிகம் சேர்த்து, வெற்றியும் பெற்று, ஆட்சியும் நடத்தி பெரும் பேர் பெற்றவர் வேலுநாச்சியார். கணவரை இழந்தும், நாடு பறிக்கப்பட்டும் துன்ப துயரங்களை அனுபவித்த போது சோர்வடையாமல், போராட முன் வந்தவர் வேலுநாச்சியார். பல்லாண்டு காலம் ஊருக்கு வெளியே இருந்து படை கட்டி, படை நடத்தி வென்று காட்டியதன் மூலமாக வீரமங்கை எனப் போற்றப்படுகிறார் வேலுநாச்சியார். அவருக்கு இன்று சிலை அமைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர்.**

விடுதலைப் போராட்டத் தியாகிகளை எந்நாளும் போற்றும் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்துள்ளது. சுதந்திர தினத்தின் 75 ஆவது ஆண்டு பெருவிழாவை வெகுசிறப்பாகக் கொண்டாடினார் முதலமைச்சர் அவர்கள். **செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரை பெருமைப்படுத்தும் வகையில் 13 அறிவிப்புகளை வெளியிட்டார். வ.உ.சி. மறைந்த நவம்பர் 18 தியாகத் திருவுருவ நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.** மகாகவி பாரதியார் மறைந்த நூற்றாண்டின் நினைவை முன்னிட்டு 14 அறிவிப்பினைச் செய்தார். உத்தரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டை பராமரிக்கவும் புதுப்பிக்கவும் அரசு சார்பில் 18 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிந்து ஒப்படைக்கப்பட்டது. கிண்டி காந்தி மண்டபத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலையும், மருது சகோதரர்கள் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. கடலூர் அஞ்சலை அம்மாள் சிலை வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களில் ஒலி, ஒளி காட்சிகள் அமைத்திட நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. காந்தி மண்டபம், அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராசர் மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் மண்டபம் ஆகியவற்றை மேம்படுத்த ரூ.3.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டத்தில் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகம் வளாகத்தில் காந்தியடிகளின் நினைவுச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

**இந்த வரிசையில் தான் வீரமங்கை வேலுநாச்சியாரும் கழக அரசால் போற்றப்படுகிறார். கொண்டாடப்படுகிறார். வாழ்க வீரமங்கை வேலுநாச்சியாரின் புகழ்!**

●●



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம், ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில், இளைஞர் அணி அலுவலகம், முத்தமிழறிஞர் கலைஞர் சிலை மற்றும் கலைஞர் நூலகம் ஆகியவற்றை அமைப்பதற்காக, கழக இளைஞர் அணித் துணைச் செயலாளரும், ஈரோடு மக்களவைத் தொகுதி உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் ஏற்பாட்டில், இளைஞர் அணி அறக்கட்டளை பெயரில் வாங்கப்பட்டுள்ள இடத்துக்கான ஆவணங்களை கழக இளைஞர் அணிச் செயலாளர் – தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 20.9.2025 அன்று வழங்கி, வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் அவர்கள் உடனிருந்தார்.

## தூத்துக்குடியில் ரூ.30 ஆயிரம் கோடியில் இரு கப்பல் கட்டும் தளங்கள்!

# தென்தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு புதியதொரு அடித்தளம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, செப். 22 -**

**தூத்துக்குடியில் விரைவில் ரூபாய் 30 ஆயிரம் கோடி முதலீட்டில் சுமார் 55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் விரைவில் இரண்டு கப்பல் கட்டும் தளங்கள் அமைக்கப்பட இருப்பதை சுட்டிக் காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு சமூக வலை தளப் பதிவில், 'தென் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு புதிய தொரு அடித்தளம் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**



“தமிழ்நாடு முதலமைச்சரின் திராவிட மாடல் ஆட்சியில் தொழில் துறை வரலாறு காணாத வகையில் வளர்ச்சி பெற்று வருகிறது. தமிழ்நாடு அரசு நாளுக்கு நாள் கொண்டு வரும் திட்டங்கள் மற்றும் கொள்கைகளால் உலக நாடுகளின் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டிற்கு படையெடுத்து வருகின்றனர். தமிழ்நாடு மென்பொருள், மின் உற்பத்திகள், வாகன உற்பத்தி, அதன் உதிரி பொருட்கள் உற்பத்தி, தற்போது காலணி உற்பத்தியில் தமிழ்நாடு பெரிய அளவில் முன்னணியில் திகழ்கிறது. மற்ற மாநிலங்கள் உற்பத்தியில் 10% இருந்தன என்றால் தமிழ்நாடு 40 சதவீதம் என்ற பெரிய அளவிலான எண்ணிக்கையில் முன்னணியில் உள்ளது.

தமிழ்நாட்டில் நடந்த உலக முதலீட்டாளர் மாநாடு, வெளிநாட்டு பயணங்களில் தமிழ்நாடு தனித்துவமான முக்கியத்துவத்தை அளிக்கும் வகையில் செமி கண்டக்டர் உற்பத்தி கொண்டுவரப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தற்பொழுது கடல் போக்குவரத்து உற்பத்திக் கொள்கை கொண்டுவரப்பட்டது. நீல பொருளாதாரத்தில் கடல் சார் உற்பத்தியில் பெரிய இலக்கு இருந்து வந்தது.

**55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு!**

தற்பொழுது கூட பூம்புகாரில் கடலுக்கு அடியில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு தமிழ்நாட்டில் இருந்து வரலாறு தொடங்குகிறது என்பதை முதலமைச்சரின் கூற்றை நிரூபிக்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்ற கழகம் மற்றும் தூத்துக்குடி வஉசி துறைமுகத்துடன் கொச்சின் ஷிப் யார்டு லிமிடெட் மற்றும் மசாகோன் டாக் கடல் கட்டுமானம் லிமிடெட் என்ற இரு நிறுவனத்துடன் தலா ரூ.15,000 கோடி என ரூ.30,000 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடியில் உலகத்தரம் வாய்ந்த வணிக ரீதியிலான கப்பல் கட்டும் தளங்களை அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இதன்மூலம் தமிழக இளைஞர்கள் 55,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடும். விரைவில் தூத்துக்குடியில் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. வெகு விரைவில் தமிழ்நாடு கடல் போக்குவரத்து உற்பத்தி கொள்கை வெளியிடப்பட உள்ளது. ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையெழுத்தான பின், ஒரு கமிட்டி அமைக்கப்படுகிறது. இந்தியாவிற்காக செய்யப்படும் விஷயங்களில் என்றும் அரசியல் செய்வதை முதலமைச்சர் விரும்ப மாட்டார். தமிழ்நாடு முதலமைச்சர் இந்தியாவிற்கான பண்பட்ட அரசியல் தலைவர்.

ஹெச்1பி விசா குறித்து ஒரு அறிவிப்பை அமெரிக்க வெளியிட்டுள்ளது. இதுபோன்ற உலக அளவிலான சூழல்களை சிந்தித்து தான் செயல்படுகிறது. தமிழ்நாட்டில் திறன்வாய்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்குவது, அதேபோல் ஜெர்மனி, ஜப்பான் போன்ற வெளிநாடுகளில் தேவைப்படும் மனித வளத்தை தயார்படுத்தும் வகையில் பணியாற்றி வருகிறோம்.

திருப்பூர் பின்னலாடை பிரச்சினை குறித்து ஒன்றிய அரசுக்கு தெரியபடுத்திருக்கிறோம். நல்ல தீர்வு எடுப்பார்கள் என எதிர்பார்க்கிறோம். ஆக்கப்பூர்வமாக சிந்திக்கூடிய பெரிய முதலீட்டாளர்களால் தமிழ்நாட்டை தாண்டி சிந்திக்க முடியாது. தமிழ்நாட்டுக்கான போட்டி மற்ற மாநிலங்களுடன் அல்ல, மற்ற நாடுகளுடன் தான்.

**★ 4 ஆண்டில் ரூ.11,31,571 கோடி முதலீடு**

'கடந்த 4 ஆண்டுகளில் பல முன்னணி நிறுவனங்களுடன் 1010க்கு மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.11,31,571 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு, 34 லட்சம் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளன. எதிர்க்கட்சி தலைவர் தொழில் துறையில் அரசியல் ஆக்க நினைப்பது சரியல்ல.

தமிழ்நாடு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பொறுப்புணர்வுடன் இந்த விவகாரத்தை அணுகவேண்டும். எந்த காலத்திலும், தவறான தகவலை கொடுத்ததில்லை” என அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நேற்று முன்தினம் பேட்டியளித்திருந்தார்.

அவரது பேட்டியை மேற்கோள் காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கீழ்க்கண்டவாறு சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

**சங்கப்பாடல்கள் சொல்லும் கப்பற்கலையில் தமிழரின் பெருமைமிகு வரலாற்றை.. இப்போது, தூத்துக்குடியில் 30 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில், 55 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறும் வகையில் இரு கப்பல் கட்டும் தளங்கள் அமையவுள்ளன. தென் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் புதியதொரு அடித்தள மாக இவை அமையும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## தேர்தலில் சீட் கொடுப்பது குறித்தும் அவர்தான் முடிவு செய்வார்!

# தமிழ்நாட்டில் இருப்பது அமித்ஷா அ.தி.மு.க.!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விமர்சனம்!



*திருப்பூர், செப். 22 -*

*தமிழ்நாட்டில் இருப்பது அ.தி.மு.க. கிடையாது. அமித்ஷா அ.தி.மு.க. என்றும், வருகிற சட்டமன்ற தேர்தலில் யாருக்கு சீட் கொடுப்பது என்பது குறித்தும் அமித்ஷா தான் முடிவு செய்வார் என தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி கூறினார்.*

*திருப்பூர் வடக்கு மாநகர தி.மு.க. அலுவலகம் திறப்பு விழா திருப்பூர் போயம்பாளையம் பகுதியில் நடைபெற்றது.*

*இதனை தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி திறந்து வைத்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:*

*த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரம் செய்யும் பகுதிகளில் மின்சாரம் நிறுத்துவ தாக பொய்யான குற்றச் சாட்டுகளை பதிவு செய்து வருகின்றனர். கரூரில் நடந்த முப்பெரும் விழா மிகப்பெரிய வெற்றியை பெற்றுள்ளது. மாநாட்டு பந்தலில் 1.50 லட்சம் தொண்டர்கள் இருந்தார்கள் வெளியிலேயே 2 லட்சம்பேர் காத்திருந்தார்கள். இதை நாங்கள் சொல்லவில்லை. அனைத்து ஊடகங்களும் கூறியதுதான். தி.மு.க. கொள்கை கூட்டம், மற்றவர்களுக்கு வருவது காக்கா கூட்டம்.*

**2026 தேர்தலில் தி.மு.க. சாதனை படைக்கும்!**

*2026 சட்டமன்ற தேர்தலை பொறுத்தவரை ஒரு கோடி வீடுகளை சென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர் கள் சந்தித்துள்ளார்கள். 2 கோடியே 70 லட்சம் உறுப்பினர்கள் எங்களிடம் இருக்கிறார்கள். சமீபத்தில் நடந்த கருத்துக்கணிப்பில் கூடதி.மு.க. 2026 சட்டமன்ற தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களை பெற்று சாதனை படைக்கும் என தெரிவித்துள்ளனர்.*

*அவ்வாறு இருக்கும் போது எங்களுடைய எதிரி யார்? என்பதே எங்களுக்கு தெரியவில்லை. தேர்தலை எதிர்பார்த்து திமுக தொண்டர்கள் காத்திருக்கிறார்கள். இது வரை நடந்த தேர்தல் நிகழ்வுகளை காட்டிலும் வருகிற சட்டமன்ற தேர்தலில் அதிக இடங்களை தி.மு.க. பிடிக்கும்.*

*அமித்ஷாவை சந்தித்து விட்டு வந்த எடப்பாடி பழனிசாமி, முகத்தை மூடிக்கொண்டு சென்றதை அனைவரும் பார்த்திருப்பீர்கள், அண்ணா பல்கலைக்கழக வழக்கில் குற்றவாளி முகத்தை மூடிக் கொண்டு சென்றது போல் எடப்பாடி பழனிசாமியும் சென்றுள்ளார்.*

*அண்ணா பல்கலைக் கழக விவகாரத்தில் யார் அந்த சார்? என்று எடப்பாடி கேட்டார். இன்று அந்த காரில் உங்களுடன் சென்ற அந்த சார் யார்? என்று கேட்க வேண்டும். தற்போது, தமிழகத்தில் இருப்பது அ.தி.மு.க. கிடையாது, அமித்ஷா அ.தி.மு.க. அதை எடப்பாடி பழனிசாமியும் உறுதி செய்துவிட்டார். எடப்பாடியின் 4 ஆண்டு கால ஆட்சியை காப்பாற்றியது பா.ஜ.க. தான் என்று வெளிப்படையாக தெரிவித்துவிட்டார்.*

*அடுத்த கட்டமாக 2025 தேர்தலில் யார்? யாருக்கு சீட் கொடுக்க வேண்டும் என்பது கூட அமித்ஷா தான் முடிவெடுப்பார். அ.தி.மு.க.விலிருந்து நாள் தோறும் அதிருப்தியில் ஒவ்வொருவராக வெளியே வந்து கொண்டிருக்கிறார்*

*அப்படி வருபவர்களை சேர்ப்பதற்கே எங்களுக்கு நேரம் சரியாக இருக்கிறது. அ.தி.மு.க.விலிருந்து யார் வெளியே வந்து தி.மு.க. வில் இணைகிறீர்களோ அவர்களுக்கு எங்களுடைய கதவு திறந்தே இருக்கும். அதனால், வருபவர்களை கண்டிப்பாக நாங்கள் வர வேற்கிறோம்.*

*ஜெயலலிதா இறந்த போதே 40 சதவீதம் அ.தி.மு.க. தொண்டர்கள் தி.மு.க.வுடன் இணைந்து பணியாற்ற துவங்கிவிட் டார்கள். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக பேசிய அ.தி.மு.க. தொண்டர்களே அவரை தளபதி என கொண் டாட துவங்கி விட்டார் கள். அப்பா, அம்மா இல்லாத குழந்தைகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஊக்கத் தொகை கொடுத்து எப்படி அரவணைத்து வருகிறாரோ, அதுபோல தற்போது அ.தி.மு.க.வும் அப்பா, அம்மா இல்லாத குழந்தையாக மாறி விட்டது.*

*அந்த குழந்தைகளையும் நமது முதல்வர் அன் போடு அரவணைத்து வருகிறார். புதிதாக வாங்கிய துடைப்பம் சற்று வேகமாக தான் பெருக்கும். அதுபோலத் தான் புதிதாக கட்சி துவங்கியுள்ள விஜய்யின் தமிழக வெற்றிக்கழகமும்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

*பேட்டியின் போது மேயர் தினேஷ்குமார். மாநகரச் செயலாளர் தங்கராஜ் மற்றும் பலர் உடன் இருந்தனர்.*



சேலம், தருமபுரி, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டத்திற்குட்பட்ட 24 தொகுதிகளின் வழக்கறிஞர்களுடன் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) சம்மந்தமாக உடனடியாக செய்ய வேண்டிய பணிகள் குறித்து, வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு ஆலோசனைகள் வழங்கினார். உடன் கழக வழக்கறிஞர்கள் உள்ளனர்.